# கரூர் நகராட்சி

## நிர்வாக அறிக்கை
## 2017 – 2018

குடிநீர் சிக்கனம்
தேவை இக்கணம்

மழைநீர் சேமிப்போம்
மண்வளம் காப்போம்

# <u>கரூர் நகர்மன்றம்</u>

| வ.எண் | பெயர் | பதவி | வார்டு எண். |
|---|---|---|---|
| 1 | திரு.ப.அசோக்குமார் | தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் | 1 முதல் 48 வரை |

# <u>குழுக்கள்</u>

| நியமனக்குழு | |
|---|---|
| **திரு.ப.அசோக்குமார்** | தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் |

| வரிமேல்முறையீட்டுக்குழு | |
|---|---|
| **திரு.ப.அசோக்குமார்** | தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் |

| ஒப்பந்தக் குழு | |
|---|---|
| **திரு.ப.அசோக்குமார்** | தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் |

# கரூர் நகராட்சி
# நிர்வாக அறிக்கை
# 2017 - 2018

| | | |
|---|---|---|
| **திரு.ப.அசோக்குமார்** | தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் | **01.04.2017** முதல் **31.03.2018** முடிய |
| **திரு.பா.இராஜேந்திரன்** | நகராட்சி பொறியாளர் | **01.04.2017** முதல் **31.03.2018** முடிய |
| **திருமதி.வ.விமலா** | நகரமைப்பு அலுவலர் | **01.04.2017** முதல் **23.11.2017** முடிய |
| **திரு.எஸ்.கோவிந்தராஜ்** | நகரமைப்பு அலுவலர் (பொ) | **24.11.2017** முதல் **31.03.2018** முடிய |
| **திருமதி.டாக்டர்.வி.சி.ஹேமசந்த் காந்தி** | நகர்நல அலுவலர் | **01.04.2017** முதல் **14.07.2017** முடிய |
| **திரு.ஆர்.தேவேந்திரன்** | நகர் நல அலுவலர் | **29.09.2017** முதல் **14.11.2017** முடிய |
| **திரு.வி.ஆனந்தகுமார்** | நகர்நல அலுவலர் | **20.12.2017** முதல் **31.03.2018** முடிய |
| **செல்வி.இரா.தமிழ்செல்வி** | மேலாளர் | **01.04.2017** முதல் **31.03.2018** முடிய |
| **திரு.எஸ்.கண்ணன்** | வருவாய் அலுவலர் | **01.04.2017** முதல் **12.06.2017** முடிய |
| **செல்வி.இரா.தமிழ்செல்வி** | வருவாய் அலுவலர் (பொ) | **13.06.2017** முதல் **20.06.2017** முடிய |
| **திரு.வி.பாஸ்கரன்** | வருவாய் அலுவலர் | **21.06.2017** முதல் **31.03.2018** முடிய |

# கரூர் நகராட்சி
# நிர்வாக அறிக்கை – 2017 - 2018
# அமைப்பும் – ஆட்சியும்
## ஆட்சி எல்லை

அமராவதி ஆற்றின் இருமருங்கிலும் அமைந்துள்ள இந்நகர் 1874ம் வருடம் நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு 24.10.1969ம் தேதி முதல் 08.05.1983ம் தேதி வரை முதல்நிலை நகராட்சியாக இருந்து அதன் பிறகு அரசு ஊரக வளர்ச்சி – உள்ளாட்சித் துறையின் 09.05.1983ம் தேதி எம்.எஸ்.எண்.651 அரசு ஆணையின்படி இந்நகராட்சியினை தேர்வு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு அதன்பின் அரசாணை எண்.526, நாள்.27.04.1988ன்படி சிறப்பு நிலை நகராட்சியாக 24.05.1988 முதல் தரம் உயர்த்தி 25.10.2011 வரை தொடர்ந்து நடந்து வந்தது. இதன் எல்லைக்குள் கரூர், இனாம் கரூர் வருவாய் கிராமமும், சணப்பிரட்டி, லட்சுமி நாராயண சமுத்திரம், பாலம்பாள்புரம், திருமாநிலையூர் மற்றும் தாந்தோணி கிராமங்கள் அடங்கியிருந்தன.

பழைய கரூர் நகராட்சியின் பரப்பு 6.03 சதுர கிலோ மீட்டர்களாகவும், 1991ம் ஆண்டின் குடிக்கணக்குப்படி நகரின் மொத்த மக்கள் தொகை 73418 ஆகவும் இருந்தது. 2001ம் ஆண்டு மக்கட்தொகை கணக்குப்படி மொத்த மக்கள் தொகை 76,328 ஆகவும் இருந்தது. 1995 முடிய 32 வார்டுகளாக பிரிக்கப்பட்டிருந்த நகராட்சி எல்லைகள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.62, நாள்.22.03.1995ன்படி வார்டுகளின் எண்ணிக்கை 36 ஆக நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

2010ம் ஆண்டு கரூர் நகர்மன்ற தீர்மானம் எண்.329, நாள்.13.09.2010ன்படி கரூர் நகராட்சியை ஒட்டியுள்ள சணப்பிரட்டி ஊராட்சி, தாந்தோணி நகராட்சி மற்றும் இனாம் கரூர் நகராட்சி ஆகியவனவற்றை கரூர் நகராட்சியுடன் இணைக்க அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதின் பேரில் அரசாணை எண்.279 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.09.11.2010ன்படி, மேற்படி உள்ளாட்சிகளை இணைத்து உத்தரவிட்டது. அது விபரம் அனைத்தும் தமிழ்நாடு மாநில அரசிதழில் Part II section 2, நாள்.09.11.2010ல் பிரசுரமாகியுள்ளது. பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதும் பெறாததால், அரசாணை எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.14.01.2011ல் மேற்படி உள்ளாட்சிகள் கரூர் நகராட்சியுடன் இணைக்கவும், வரும் உள்ளாட்சி சாதாரண தேர்தலில் போது தேர்தல் நடத்தப்படும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அரசிதழில் Part II section 2, நாள்.14.01.2011ல் பிரசுரம் செய்யப்பட்டது.

**உள்ளாட்சிகளின் இணைப்புக்கு பின்பாக கரூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 53.26 சதுர கிலோ மீட்டராகும்.** 2001ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பு 1,68,448 ஆகவும் உள்ளது. 2011ம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி மக்கள் தொகை 2,14,283 ஆக உள்ளது. அரசாணை எண்.90, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.28.06.2011ல் விரிவாக்கம் செய்யப்பட்ட நகராட்சியை 48 வார்டுகளாக பிரிவினை செய்திட அரசு உத்தரவு பிறப்பித்து, பழைய வார்டுகளின் எல்லைகளை மாறுதல் செய்யா வகையில் 3 நகராட்சிகள் மற்றும் 1 கிராம ஊராட்சியை இணைத்து 48 வார்டுகள் பிரிக்கப்பட்டு, அதற்கான எல்லைகளை அரசாணை எண்.128, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.08.09.2011ல் நிர்ணயம் செய்து அங்கீகரித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 28 வார்டுகள் பொது வார்டுகளாகவும், 16 வார்டுகள் பெண்களுக்கும், 4 வார்டுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அதில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் தாழ்த்தப்பட்ட பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்து அரசு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 48 நகர்மன்ற உறுப்பினர்களுக்கான தேர்தல் 19.10.2011ல் நடைபெற்றது.

**தேர்தல்:**

அறிக்கை ஆண்டில் தேர்தல் ஏதும் நடைபெறவில்லை.

**கூட்டங்கள்:**

அறிக்கை ஆண்டில் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் மற்றும் தேவை ஏற்படும் காலங்களில் அவசரக்கூட்டங்களும் நடைபெற்றன. அறிக்கையாண்டில் சாதாரண கூட்டம் 12 முறை கூடி 649 பொருட்கள் முடிவு செய்யப்பட்டது. சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டம் 3வது அட்டவணை வகையில் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி மன்றக்கூட்டங்கள் நடைபெற்றது.

**குழுக்கள்:**

சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டம் 13–ன்படி நியமனக்குழுவும், 68 பிரிவு 1–ன்படி மேல் முறையீட்டுக் குழுவும், ஒப்பந்தக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. அறிக்கையாண்டில் தொடர்ந்து செயலாற்றி வந்தன.

**நிர்வாகம்:**

நிர்வாக மேலாண்மைக்கும் ஒருங்கிணைந்த கரூர் நகராட்சிக்கு 25.10.2011 முதல் கீழ்க்கண்டவாறு பணியாளர்களை கொண்டு நிர்வாகம் செய்யப்படுகிறது. பணியாளர்களுக்கும் ஆன செலவு நகராட்சியில் இருந்தும், ஆணையர் அவர்களின் சம்பளம், அகவிலைப்படி, அரசாங்க நிதியிலிருந்தும் வழங்கப்படுகிறது.

| பெயர் | பணி இடம் | காலி பணியிடம் |
|---|---|---|
| மேலாளர் | 1 | – |
| கணக்கர் | 1 | 01 |
| உதவியாளர் | 7 | 05 |
| இளநிலை உதவியாளர் | 26 | 06 |
| தட்டச்சர் | 2 | – |
| பதிவறை எழுத்தர் | 6 | – |
| அலுவலக உதவியாளர் | 11 | 1 |
| இரவு காவலர் | 1 | – |
| சுருக்கெழுத்தர் | 1 | 1 |

அரசு ஆணை நிலை எண்.29 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.13.02.2013ன்படி இனாம் கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பணியாளர்கள் கரூர் நகராட்சி பணியாளர்களாக ஈர்க்கப்பட்டுள்ளனர்.

நகராட்சி நிர்வாகம் கணினி மயமாக்கப்பட்டு 01.04.1997 முதல் வசூல் பணி உள்பட அனைத்துப் பணிகளும் கணினி பணியாக மாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

| பணியிடம் | பணி இடம் | காலி பணியிடம் |
|---|---|---|
| உதவி கணினித் திட்ட அமைப்பாளர் | 1 | – |
| புள்ளி விபரக்குறிப்பாளர் | 3 | 2 |

## <u>பொறியியல் பிரிவு</u>

**<u>பணியாளர்கள்:</u>**

கரூர் நகராட்சியில் 25.10.2011 முதல் இனாம் கரூர் நகராட்சி, தாந்தோணிமலை நகராட்சி, மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி இணைக்கப்பட்ட பின்பு பொறியியல் பிரிவு மற்றும் குடிநீர் பணிகளை கரூர் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்களை கொண்டு ஒருங்கிணைந்த நகராட்சி பகுதிகளுக்கு பணிகள் செய்யப்பட்டு வருகிறது. அரசு ஆணை நிலை எண்.29, நகராட்சி நிர்வாக மண்டல குடிநீர் வழங்கு துறை நாள்.13.02.2013ன்படி இனாம் கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பணியாளர்கள் கரூர் நகராட்சி பணியாளர்களாக ஈர்க்கப்பட்டுள்ளனர்.

**<u>பொறியர் பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட பொதுப்பணி அலுவலர்கள் பின்வருமாறு</u>**

| பணியின் பெயர் | பணி இடம் | காலி பணியிடம் |
|---|---|---|
| நகராட்சி பொறியர் | 1 | – |
| பொதுப்பணி மேற்பார்வையாளர் | 2 | – |
| பொதுப்பணி லாரி ஓட்டுநர் | 1 | – |
| ஈப்பு ஓட்டுநர் | 1 | – |
| பொதுப்பணி உதவிப் பொறியர் | 2 | – |
| பணி ஆய்வர் | 2 | – |
| வரைவாளர் | 1 | – |
| தங்கும் விடுதி காவலர் | 1 | – |
| சாலை பணியாளர் | 2 | – |

**<u>தெருவிளக்கு பராமரிப்பு</u>**

| பணியின் பெயர் | பணி இடம் | காலி பணியிடம் |
|---|---|---|
| மின் கம்பியாளர் | 6 | 2 |
| தெருவிளக்கு மின்கம்பி உதவியாளர் | 5 | – |
| மினி லாரி ஓட்டுனர் (ஏணி லாரி) | 1 | – |

தெரு விளக்கு மற்றும் பாதாள சாக்கடை பணிக்கான போதுமான பணியாளர்கள் இல்லாத நிலையில் வெளிநபர்களை ஒப்பந்த முறையில் (Outsourcing) தருவித்து பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

**<u>கட்டிடங்கள்</u>**

| | |
|---|---|
| பள்ளி கட்டிடங்கள் | 11 |
| சுகாதார வளாக கட்டிடங்கள் | 44 |
| சத்துணவு மைய கட்டிடங்கள் | 28 + 11 (பள்ளி சத்துணவு மையங்கள்) |
| சமுதாயக் கட்டிடங்கள் | 3 |
| அலுவலக கட்டிடங்கள் | 4 |
| பல்நோக்கு அங்காடி | 1 |

## <u>சாலைகள்</u>

கரூர் நகராட்சி, இனாம் கரூர், தாந்தோன்றிமலை பகுதி மற்றும் சணப்பிரட்டி உள்பட எல்லைக்குள் இருக்கும் சாலைகளை நெடுஞ்சாலைகள், பிற சாலைகள் என இரண்டு வகைகளாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. நெடுஞ்சாலையின் நீளம் சுமார் **68.862** கிலோ மீட்டர் ஆகும். இதை நெடுஞ்சாலைத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. மாநில நெடுஞ்சாலை | – | 46.672 கி.மீ |
| 2. தேசிய நெடுஞ்சாலை | – | 22.190 கி.மீ |
| **மொத்தம்** | – | ***<u>68.862 கி.மீ.</u>*** |

அறிக்கையாண்டில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த மொத்த சாலையின் நீளம் **330.393** கி.மீ. **25.10.2011** முதல் இனாம் கரூர் நகராட்சி, தாந்தோன்றிமலை நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி இணைக்கப்பட்ட பின்பு மேற்கண்ட பகுதிகளின் சாலைகளை கரூர் நகராட்சி எடுத்து பராமரிப்பு செய்து வருகிறது.

| | | **கரூர்** | **இனாம் கரூர்** | **தாந்தோணி** | **சணப்பிரட்டி** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|
| 1 | தார் சாலைகள் | 47.60 | 83.56 | 56.90 | 27.638 | 215.698 |
| 2 | கருங்கல் , ஜல்லி சாலைகள் | - | - | - | - | - |
| 3 | மண் சாலைகள் | 4.39 | 12.90 | 34.975 | 16.30 | 68.565 |
| 4 | சிமெண்ட் சாலைகள் | 23.62 | 12.13 | 5.39 | 4.99 | 46.13 |
| | **மொத்தம்** | | | | | **330.393** |

## <u>பாலங்கள்</u>

கரூர் நகரத்தையும், பசுபதிபாளையத்தையும் இணைக்க அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு முழ்குபாலமும் கட்டி **14.02.1963** அன்று திறந்து வைக்கப்பட்டது. பாலத்தின் நீளம் **740** அடி, அகலம் **24** அடி, **33** கண்களை உடையது. புதிய மேம்பாலம் கட்டுவதற்காக அரசாணை எண்.**185**, நாள்.**02.12.2011**ன்படி நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு (கோப்பு எண்.எப்**1/5169/08**). புதிய பாலம் பணி முடிவுபெற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

மேலும் லைட்ஹவுஸ் பகுதியையும், திருமாநிலையூர் பகுதியையும் இணைக்கும் வகையில் அமராவதி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அரசு கடிதம் **31630**/எம்.ஏ**3/94.2** கிர்லோஸ்கர் **கன்ஸ்ல்டன்ட்** மூலம் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு **11.02.2000** அன்று அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டி இயக்க மாற்றுதல் திட்டத்தின் கீழ் கட்டி முடிந்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டது. அமராவதி ஆற்றில் குறுக்கே கட்டப்பட்ட புதிய பாலத்தின் காரணமாக கரூர் நகரில் போக்குவரத்து நெரிசல் கணிசமாகக் குறைந்துள்ளது.

தொழிற்சாலைகளுக்கும், அலுவலகத்திற்குச் செல்வோருக்கும், பள்ளிக்குச் செல்வோரும் போக்குவரத்து நெரிசலில் சிக்கி அவதிப்படும் நிலை முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. பாலம் நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பிற்கு அரசாணை எண்.65 மற்றும் 166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள்.19.12.2005ன்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது சுங்க கட்டணம் வசூலிக்கப்படவில்லை. இந்த புதிய பாலமானது பொதுவாக அனைத்து மக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## பொறிகளும் கருவிகளும்

கரூர் நகராட்சியில் 25.10.2011 முதல் இனாம் கரூர் நகராட்சி, தாந்தோன்றிமலை நகராட்சி, மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி இணைக்கப்பட்ட பின்பு அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது. குடிதண்ணீர் வழங்க நகராட்சிக்கு சொந்தமான ஒரு குடிநீர் லாரி மூன்றும் சாலை வேலைகளுக்கு மற்றும் பொதுசுகாதாரப் பணிகளுக்கு இரண்டு எண்ணிக்கை மினி லாரியும் இருக்கின்றன. தண்ணீர் குறைவாக உள்ள இடங்களுக்கு 6000 லிட்டர் கொண்ட குடிநீர் லாரிகள் மூலமாக நாள்தோறும் வழங்கப்படுகிறது. நகராட்சி பகுதிகளில் உயரமான கம்பத்தில் உள்ள தெரு விளக்குகள் சீர் செய்ய அலுமினிய ஏணியுடன் கூடிய மினி லாரி ஒன்று உள்ளது. மேலும் நிதியாண்டில் புதியதாக தானியாங்கி உயர்த்தி ஏணி கொண்ட வாகனம் ஒன்று வாங்கப்பட்டு பிரதான சாலைகளில் உள்ள மையத்தடுப்பாணை உயரமான கம்பங்களில் மாட்டுவதற்கு பயன்பாட்டில் உள்ளது. நடமாடும் நீர் கசிவு கண்டுபிடிப்பு வாகனம் ஒன்றும், பாதாள சாக்கடை அடைப்புகளில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்ய பாதாள சாக்கடை சரி செய்யும் வாகனம் இரண்டும் உள்ளது. மேலும் பாதாள சாக்கடை அடைப்பின் நீக்க மூன்று சக்கர ஆட்டோ இரண்டு எண்ணிக்கை உள்ளது.

| S.No. | Vehicle No. | Name of the Vehicle | Year of Purchasing |
|---|---|---|---|
| 1 | TN47 U 5179 | Jet Rod Lorry | 04.03.2010 |
| 2 | TN47 U 4468 | Jet Rod Lorry | 17.02.2010 |
| 3 | TN47 W 2331 | Tata Ace | 04.03.2011 |
| 4 | TN47 D 6542 | Water Lorry | 22.07.1998 |
| 5 | TN47 F 2910 | | 14.03.2000 |
| 6 | TN47 S 0070 | Jeep | 22.01.2008 |
| 7 | TN47 F 1521 | | 27.01.2000 |
| 8 | TNX 4491 | | 02.04.1983 |
| 9 | TN47 M 5103 | | 20.07.2005 |
| 10 | TN47 V 8186 | De – Silting Auto | 21.12.2010 |

| | | | |
|---|---|---|---|
| 11 | TN47 V 5436 | De – Silting Auto | 20.10.2010 |
| 12 | TN47 T 8386 | Bus water leakage (Tax Collection) | 02.09.2009 |
| 13 | TN47 M 5135 | | 21.07.2005 |
| 14 | TN47 S 9329 | Bolerio | 18.11.2008 |
| 15 | TN47 R 9884 | Auto (Health Section) | 14.01.2008 |
| 16 | TN47 AB 7476 | Scorpio | 06.06.2012 |
| 17 | TN47 AC 0324 | JCB (Health Section) | 01.08.2012 |
| 18 | TN47 AF 2941 | (Street light) AshokLeyland SKY LIFT LADDER | 22.09.2014 |
| 19 | TN47 AH 6364 | Scorpio | 10.02.2016 |
| 20 | TN 47 AJ 8690 | Mahandra | 2017 |
| 21 | Excavitor | HYNDAI | 2017 |
| 22 | Open body Tipper | Ashok Leyland | 2017 |
| 23 | Open body Tipper | Ashok Leyland | 2017 |
| 24 | Open body Tipper | Ashok Leyland | 2017 |
| 25 | TN 47 AK 0499 | Ashok Leyland | 27.09.2017 |
| 26 | TN 47 AK 0520 | Ashok Leyland | 27.09.2017 |
| 27 | TN 47 AK 0504 | Ashok Leyland | 27.09.2017 |

## விளக்கு வசதிகள்

## தெரு விளக்குகள்

இந்நகராட்சிக்குட்பட்ட **48** வார்டுகளிலும் மொத்தம் **9650** எண்ணிக்கை தெருவிளக்குகள் பொது மக்கள் நலனுக்காக உள்ளன. இதில் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் நிவர்த்திக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| குழல் விளக்குகள் | 40 வாட்ஸ் | 5588 |
| மெட்டல் ஹாலய்டு விளக்குகள் | 150 வாட்ஸ் +400 வாட்ஸ் | 79 |
| CFL விளக்குகள் | 1 x 36வாட்ஸ் | 2396 |
| சோடியம் ஆவி விளக்குகள் | 70 x 150 & 250 வாட்ஸ் | 1014 |
| உயர்மின் கோபுர விளக்குகள் | (2 x 400 வாட்ஸ்) 1 Luminaries | 186 |

| | | |
|---|---|---|
| T5 விளக்குகள் | 41x 24வாட்ஸ் | 335 |
| LED விளக்குகள் | | 52 |
| **மொத்தம்** | | **9650** |
| தெரு விளக்கு மின் இணைப்புகள் | | 853 |

## பாதாள சாக்கடை வசதிகள்

இந்நகராட்சிக்குட்பட்ட கரூர் நகரம் இனாம்கரூர் பகுதியில் வார்டு எண்.1 முதல் 32 வரையுள்ள பிரதான சாலைகளில் பாதாள சாக்கடைகள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மக்கள் பாதை மற்றும் பசுபதிபாளையம், பாலம்மாள்புரம் நீரூந்து நிலையங்களில் உள்ள விசை மோட்டார் மூலம் கழிவுநீரானது அரசு காலனியில் 15MLD கொள்ளளவில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

### ஆரம்ப கல்வி

01.04.1990 முதல் ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாகப் பொறுப்பு நகராட்சியில் இருந்து அரசு கல்வித்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது. அரசிடமிருந்து ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சிக்கு சொந்தமான பள்ளிக் கட்டிட பராமரிப்பு பணிகள் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### பாலர் பள்ளி சத்துணவு மையங்கள்

இம்மையங்களின் செயல்பாடுகள் அனைத்தும் 2004ம் ஆண்டு முதல் உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் (ICDS) இணைக்கப்பட்டுவிட்டது. பராமரிப்பு பணிகள் நகராட்சியால் செய்யப்பட்டு வருகின்றன.

### பள்ளி சத்துணவு மையங்கள்

இந்நகராட்சியில் 3 ஆரம்ப பள்ளிகளும், 6 நடுநிலைப்பள்ளிகளும், ஒரு உயர்நிலைப்பள்ளி மற்றும் இரண்டு மேல்நிலை பள்ளிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் தினமும் 5 வயது முதல் 9 வயது வரை 556 சிறுவர் சிறுமியரும் ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பயனடைந்து வருகிறார்கள்.

| | |
|---|---|
| ஆரம்பபள்ளி | 159 |
| நடுநிலைப்பள்ளி | 397 |
| உயர்நிலைப்பள்ளி | 100 |
| நகராட்சி பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி | 180 |
| நகராட்சி மேல்நிலைப்பள்ளி | 200 |
| | **1036** |

ஒரு உயர்நிலைப் பள்ளியில் 100 மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்த ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 8 அமைப்பாளர்களும், 10 உதவியாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள்.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 3 அமைப்பாளர்களும் 5 உதவியாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். பள்ளிச் சத்துணவு மையங்களில் செயல்படுத்துவதற்காக நடப்பாண்டில் அரசு மானியம் ரூ.11,85,682/– அனுமதிக்கப்பட்டுள்ளது. நகராட்சி பள்ளி சத்துணவு மையங்களில் வாரத்திற்கு ஐந்து முட்டைகள் உணவு உண்ணும் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. நகராட்சி நடுநிலைப்பள்ளிகள் – 3, நகராட்சி மேல்நிலைப்பள்ளிகள் – 2 மற்றும் நகராட்சி உயர்நிலைப்பள்ளி – 1 ஆகியவற்றில் அரசு ஆணைப்படி எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

## பொதுசுகாதாரம்

## மருத்துவம்

நகரத்தில் அரசு மருத்துவக் கல்லூாி மருத்துவமனை–1, நகர்மன்ற சித்த மருத்துவமனை– 1, நகராட்சி கஸ்தூரிபாய் மகப்பேறு மருத்துவமனை –1 ஆக மூன்று பொது மருத்துவமனைகள் உள்ளன. நகர ஆரம்ப சுகாதார நிலையம் பசுபதிபாளையம், தாந்தோணி , இனாம் கரூர் பகுதிகளில் இயங்கி வருகிறது.

சித்த மருத்துவமனைக்கு நிலவேம்பு குடிநீர் பவுடர் ரூ.75,428/–க்கு வாங்கப்பட்டது. நிலவேம்பு குடிநீர் 950214 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி கஸ்தூரிபாய் தாய்–சேய் நல விடுதியில் 2017–2018ம் வருடத்தில் பெண்கள்–20745, ஆண்கள் – 15718 நபர்களுக்கும், ஆண் குழந்தைகள்கள் – 2899, பெண் குழந்தைகள்–3018, பிரசவம்–28நபர்களுக்கும், உள்நோயாளிகள்–582 நபர்கள் மொத்தம் 42990 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

## பிறப்பு விகிதமும், மகப்பேறு உதவியும்

இவ்வாண்டில் பதிவான மொத்தப் பிறப்புகள் 7923 சென்ற ஆண்டில் 7932 பிறப்புகள். மக்கள் தொகை கணக்குப்படி நகராட்சி எல்லைக்குள் வசிக்கும் பிறப்பு விகிதம் அறிக்கையாண்டில் 33.73%. சென்ற ஆண்டு 33.83%. இவ்வாண்டில் இறப்பு பதிவானது மொத்தம் 1841. இறந்து பிறந்தது 50. இந்நகர் பத்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பத்து துப்புரவு ஆய்வாளர்கள் பெரிய குளத்துப்பாளையம், வெங்கமேடு வாட்டர் டேங் அலுவலகம், மக்கள் பாதை கோட்டம், பசுபதிபாளையம் கோட்டம், வடக்கு காந்திகிராமம் கோட்டம், தாந்தோணி கோட்ட அலுவலகம் ஆகிய பகுதிகளிலும் பேருந்து நிலையம், அரசு மருத்துவமனை வளாகம், தினசரி மார்க்கெட் அருகில் உள்ள துப்புரவு கோட்ட அலுவலகங்களில் மேற்கூறிய பகுதிகளில் நிகழும் பிறப்பு இறப்புகளை பதிவும் செய்கின்றனர். மேலும் அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் பிறப்பு, இறப்புகளை பதிவு செய்ய ஒரு பிறப்பு இறப்பு பதிவாளரும் ஆக பத்து பிறப்பு இறப்பு பதிவாளர்கள் பணிபுரிகின்றார்கள்.

இந்நகராட்சியில் பயிற்சி பெற்ற இரண்டு மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் இரண்டு மகப்பேறு ஆயாக்கள் பணியாற்றி வருகிறார்கள். கஸ்தூரிபாய் தாய் சேய் நலவிடுதி நகராட்சியால் தொடர்ந்து இந்த விடுதியில் 11 படுக்கை வசதி உண்டு. நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தில் மின் விளக்குகள், விசிறிகள், குடிநீர் குழாய்களுடன் உள்ளது.

| | 2017–2018 |
|---|---|
| No.of Antenatal cases registered | 502 |
| No.of Antenatal cases visit | 502 |
| No.of Postnatal visit | 467 |
| No.of Postnatal cases registered | 467 |
| No.of Infants visits | 467 |
| No.of Antenatal clinic held | 52 |
| No.of Immunisation clinic held | 104 |
| No.of Family Planning cases canvassed | 467 |
| No.of Pre-School children registered | - |
| No.of Infant Death reported | 1 |
| No.of Deliveries | 28 |
| No.of Still births | 1 |

## தடுப்பூசித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் நிர்ணயித்த இலக்கு, சாதனை, சாதனையின் சதவீதம் விபரம் வருமாறு:

| வ.எண். | தடுப்பூசி பெயர் | இலக்கு | சாதனை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | பெண்டாவேலன்ட், ஊசி கொடுக்கப்பட்ட ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 468 | 488 | 100% |
| 2 | போலியோ ஊசி கொடுக்கப்பட்ட ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 468 | 488 | 100% |
| 3 | தட்டம்மை தடுப்பூசி கொடுக்கப்பட்ட ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 468 | 471 | 100% |
| 4 | காசநோய் தடுப்பூசி கொடுக்கப்பட்ட ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 468 | 467 | 100% |
| 5 | DPT – II nd Booster தடுப்பூசி கொடுக்கப்பட்ட 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 819 | 808 | 99% |
| 6 | இரன ஜன்னி தடுப்பூசி அளிக்கப்பட்ட கர்ப்பிணி பெண்கள் | 508 | 502 | 100% |
| 7 | இரன ஜன்னி தடுப்பூசி அளிக்கப்பட்ட 10 வயதுக்குட்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை | 977 | 965 | 99% |
| 8 | இரன ஜன்னி தடுப்பூசி அளிக்கப்பட்ட 16 வயதுக்குட்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை | 890 | 910 | 100% |
| 9 | இரும்பு சத்து மாத்திரை அளிக்கப்பட்ட தாய்மார்கள் | 508 | 495 | 98% |
| 10 | இரும்பு சத்து மாத்திரை அளிக்கப்பட்ட 3– 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 1226 | 1219 | 99% |
| 11 | வைட்டமின் “A” சல்யூஷன் அளிக்கப்பட்ட 1– 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள். | 3048 | 3048 | 100% |

## தாய் சேய் நல விடுதியில் உள்ள பணியாளர்கள் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | பெண் மருத்துவ அலுவலர் | 1 | – |
| 2 | மகப்பேறு உதவியாளர்கள் | 5 | 2 |
| 3 | ஆயாக்கள் | 5 | 2 |
| 4 | இரவுக்காவலர் | 1 | – |

அறிக்கையாண்டில் குடும்ப நல திட்டத்தின்கீழ் இந்நகராட்சிக்கு ஏற்படுத்திய இலக்கு 266 ஆகும். இதில் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் 191 ஆகும்.

## இறப்பு விகிதமும், கொள்ளை நோய்கள்

| | |
|---|---|
| அறிக்கையாண்டில் பதிவான இறப்பு | 1841 |
| சென்ற ஆண்டு | 1819 |
| டைபாய்டு காய்ச்சல் | இல்லை |

| | |
|---|---|
| டெங்கு காய்ச்சல் | 31 |
| காச நோய் | இல்லை |

## <u>மலேரியா, கொசுப்புழு ஒழிப்புத் திட்டம்</u>

இத்திட்டத்தின் கீழ் மலேரியா துப்புரவு ஆய்வர் (பொறுப்பு – 1) களப்பணி உதவியாளர் – 1 மற்றும் 11 துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். தற்பொழுது இத்திட்டத்திற்கு அரசு மானியம் ஏதும் வழங்கப்படவில்லை.

அறிக்கையாண்டில் நகர்ப்பகுதியில் உள்ள கொசுப்புழு உற்பத்தியாக ஏதுவாக உள்ள சாக்கடைகள், வாய்க்கால், ஆற்றுப்பகுதியில் உள்ள நீர் தேங்கும் இடங்கள், பாறைக்குழிகள், சிமிண்ட் பைப் செய்யும் தொட்டிகள், வீடுகளில் சேமிப்பு வைத்திருக்கும் தொட்டிகள், கிணறுகள் ஆகியவற்றில் டெமிபாஸ் என்னும் மருந்தினை கொண்டு கொசுப்புழு உற்பத்தியை குறைக்கப்பட்டு வருகிறது. நகரில் சென்ற ஆண்டில் மலேரியா காய்ச்சலால் எவரும் பாதிக்கப்படவில்லை. தினசரி 9 வார்டுகள் வீதம் கையினால் அடிக்கக்கூடிய புகை இயந்திரத்தில் புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது.

மேலும், கரூர் நகராட்சியில் 48 வார்டுகளுக்கு 225 நபர்களை கொண்டு கொசுப்புழு ஒழிப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சியில் உள்ள 48 வார்டுகளின் அனைத்து குடியிருப்புகளும் ஆய்வு செய்யப்பட்டு கொசுப்புழு தடுப்பு மருந்து (டெமிபாஸ்) தெளிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி மூலம் பொதுமக்கள் அனைவருக்கும் வீடுவீடாக சென்று துண்டு பிரசுரங்கள் வழங்கி டெங்கு காய்ச்சல் பரவும் விதம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. 10 புகைத்தெளிப்பான்கள், 43சிறிய புகைத் தெளிப்பான்கள் மற்றும் இரண்டு வாகன புகைத்தெளிப்பான் கொண்டு நாள் ஒன்றுக்கு 4 வார்டுகளில் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனைத்து வார்டு பகுதியிலும் கூட்டுத் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாள்தோறும் ஒவ்வொரு பள்ளியிலும் காலையில் இறை வணக்க வேளையில் அனைத்து மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரிய பெருமக்களுக்கும் கொசுப்புழு உற்பத்தியாகும் விதம், டெங்கு காய்ச்சல் பரவும் விதம் குறித்து விளக்கமாக தெரிவித்தும் எளிதில் அவர்கள் புரிந்து கொள்ளும் விதமாக செயல்முறையாக முட்டை, லார்வா, பியூபா, முதிர்க்கொசு, நோய் பரவும் விதம் ஆகியவைகளை பார்வைக்கு வைத்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் விழிப்புணர்வு பெறும் வகையில் நகரில் முக்கிய இடங்களில் பிளக்ஸ் பேனர்கள் வைக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் பஸ்நிலையம், நகராட்சி கஸ்தூரிபாய் தாய்சேய் நலவிடுதி, மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் நிலவேம்பு கசாயம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அனைத்து பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும் கூட்டு துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட்டும், புகை மருந்தும் அடிக்கப்பட்டும் வருகிறது. நகராட்சி பகுதியில் காய்ச்சல் அறிகுறி கண்ட நபர்களின் வீடுகளில் தகவல் பெற்ற அன்றே வீட்டில் புகைமருந்து தெளிக்கப்பட்டும், அருகில் வசிப்பவர்களது வீடுகளுக்கும் புகை மருந்து தெளித்தும், மேற்கண்ட பகுதிகளில் கொசுப்புழுக்களை கண்டறிந்து அவற்றினை அழித்தும் சுகாதார முறைகளை கடைபிடிக்க அறிவுரைகளும் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சிப் பகுதிகளில் அந்தந்தப்பகுதி சுய உதவிக்குழுக்களை கொண்டும் கொசுப்புழு ஒழிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## கரூர் நகராட்சி தெரு நாய் அறுவை சிகிச்சை

கரூர் நகராட்சிப்பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்களை அறுவை சிகிச்சை செய்ய ரூ.24.00 லட்சம் தமிழக அரசால் நிதி ஒதுக்கப்பட்டது. (G.O.No.10, Date.18.01.2007) மேற்படி தெரு நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய நகராட்சிக்கு சொந்தமான கலவை உரக்கிடங்கில் அறுவை சிகிச்சை அரங்கம், ஓய்வு அறை மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின்பு கவனிப்பு அறை ரூ.3.00 லட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் அறுவை சிகிச்சை செய்ய Animal welfare Boardல் பதிவு பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் முறையாக ABC திட்டத்தில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதழின் பேரில் சிறப்பாக அறுவை சிகிச்சை 652 ARV தடுப்பூசி போடப்பட்டு தெரு நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும் நகரில் சுற்றிதிரியும் தெருநாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பொது சுகாதாரம் – துப்புரவு

கரூர் நகராட்சியில் 25.10.2011 முதல் இனாம் கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி இணைக்கப்பட்ட பின்பு அனைத்து பகுதிகளின் பொது சுகாதாரம் மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சி துப்புரவு பணிகளை செய்வதற்காக உள்ள பணியாளர்கள் விபரம்.

| | | | காலிப்பணியிடம் |
|---|---|---|---|
| 1 | துப்புரவு – ஆய்வர்கள் | 10 | – |
| 2 | துப்புரவு மேற்பார்வையாளர்கள் | 16 | 1 |
| 3 | களப்பணி – உதவியாளர் | 1 | – |
| 4 | துப்புரவு பணியாளர்கள் | 406 | 157 |
| 5 | லாரி ஓட்டுனர்கள் | 16 | 5 |
| 6 | ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) | 403 | – |

குப்பை, கூளங்கள் அப்புறப்படுத்த கீழ்க்கண்ட வாகனங்கள் உபயோகப்படுத்தப்பட்டது.

## வாகனங்களின் விபரம்

| | |
|---|---|
| மூன்று சக்கர சைக்கிள் | 172 |
| தள்ளுவண்டிகள் | 95 |
| டிப்பர் லாரி | 7 |
| கழிவடை செய்யப்பட உள்ள லாரிகள் | 3 (இயங்காமல் உள்ளது) |
| டம்பர் பிளேசர் | 4 |
| டம்பர் பின்கள் | 231 |
| காம்பாக்டர் லாரிகள் | 2 |
| காம்பாக்டர் பின்கள் | 200 |

## வழங்கப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள்

| | |
|---|---|
| தலை கவசம் | – |
| முக கவசம் | 250 |
| ஒளிரும் சட்டை | 250 |
| கிளவுஸ் | 250 |
| கம்பூட் | 50 |
| மழைக்கோட் | – |
| புகைத்தெளிப்பான்கள் | – |
| கைத்தெளிப்பான்கள் | – |
| வாகனத்தில் பொருத்திய புகைத்தெளிப்பான் | – |

வீடுவீடாக குப்பைகளை மக்கும் குப்பை, மக்கா குப்பை என தரம் பிரித்து தள்ளுவண்டிகள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களில் சேகரித்து டம்பர் பிளேசர் மற்றும் காம்பாக்டர் பின்களில் கொட்டப்பட்டு, டம்பர் பிளேசர் மற்றும் காம்பாக்டர் மூலம் கலவை உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

## மழை நீர் வடிகால் கால்வாய்

இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு மழைநீர் வடிகால் கால்வாய்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. திறந்த வெளி மண் கால்வாய் – 14.50 கி.மீ.(கச்சா)
2. திறந்த வெளி கட்டிட கால்வாய் – 257.65 கி.மீ. (பக்கா)

## கலவை உரம்

கலவை உரம் தயாரிப்புப் பணிக்காக ஒரு துப்புரவு ஆய்வர் (பொறுப்பு), இரண்டு துப்புரவுப்பணி மேற்பார்வையாளரும், மற்றும் 13 கலவை உர தொழிலாளர்களும், ஒரு காவலரும் பணிபுரிந்து வருகின்றனர். வாங்கல் சாலையில் உள்ள அரசு காலனிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான 24.50 ஏக்கர் பரப்பளவில் தினசரி சேகரமாகும் 116 மெ.டன் குப்பைகள்

கொட்டப்பட்டு வருகிறது. 7.75 ஏக்கர் பரப்பளவில் உள்ள கலவை உரக்கிடங்கில் அணுகு சாலைகளை சிமெண்ட் தளம். அலுவலக அறை, தண்ணீர் வசதி, மின்வசதி, சேகரிப்பு கூடம் மற்றும் சுற்று சுவர் போன்ற பணிகள் ரூ.272.25லட்சத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 7.5 ஏக்கர் பரப்பில் உள்ள கலவை உரக்கிடங்கின் ஒரு பகுதியை ரூ.3.5லட்சம் செலவில் சமன் செய்யப்பட்டுள்ளது. மேலும் திட்டம் 2015–2016ன்கீழ் ரூ.589.00லட்சத்தில் கலவை உரக்கிடங்கினை மேம்பாடு செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் தினசரி 5மெட்ரிக் டன் திறன் கொண்ட உயிரி எரிவாயு கலன் நிறுவப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது. அதிலிருந்து உற்பத்தி ஆகும் எரிவாயு மூலம் மின்னாக்கியினை இயக்கி உரக்கிடங்கில் உள்ள மின்விளக்குகளுக்கு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது.

## அபாயகரமானதும் மற்றும் அச்ச அருவறுக்கத்தக்க தொழில்கள்:

சிற்றுண்டி விடுதிகள் பலவகைப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் செவ்வனே நடைப்பெற உப சட்ட விதிகள் அமுல்படுத்தப்பட்டன. உரிமையாணை வேண்டப்பட்ட எல்லாத் தொழிற்சாலைகள் பார்வையிடப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியில் கண்ட கட்டுபாடுகள் செயலாற்றப்பட்டதா என பார்வையிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அறிக்கையாண்டில் 1631 உரிமையாணைகள் வழங்கப்பட்டது. இதன் மூலம் கிடைத்த வருமானம் ரூ.20.20 லட்சம் ஆகும்.

## சந்தைகளும் விழாக்களும்

1) 2017ம் ஆண்டு மே மற்றும் ஜீன் மாதங்களில் இந்நகரில் மாரியம்மன் திருவிழா நடைபெற்றது.
2) 2017ம் ஆண்டு தாந்தோன்றிமலை கல்யாண வெங்கடேஸ்வர பெருமாள் புரட்டாசி திருவிழா நடைபெற்றது. மேற்படி விழாக்களுக்கு போதுமான துப்புரவு வசதிகளும், குடிநீர் வசதிகளும், விளக்குகளும் செய்யப்பட்டன.

## குடிநீர் வழங்கல்

ஒருங்கிணைக்கப்பட்ட கரூர் நகராட்சி, இனாம் கரூர் நகராட்சி, தாந்தோன்றிமலை நகராட்சி மற்றும் சணப்பிரட்டி பகுதிகளுக்கு நகரில் சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்காக உள்ள சிப்பந்திகள் விபரம் வருமாறு:

| அலுவல் / பணியாளர்கள் | பணியிடம் | காலியிடம் |
|---|---|---|
| உதவிப் பொறியாளர் | 1 | – |
| பணி மேற்பார்வையாளர் | 3 | 1 |
| மின் கண்காணிப்பாளர் | 1 | – |
| மின் பணியாளர் நிலை – 1 | 5 | 2 |
| மின் பணியாளர் நிலை – 2 | 5 | 1 |
| குழாய் ஆய்வாளர் | 4 | 1 |
| பைப் லைன் பிட்டர்கள் | 4 | – |
| பி.எப்.கிளீனர்கள் | 10 | 3 |
| தலைமை நீரேற்று நிலைய கிளீனர்கள் | 6 | 6 |
| தலைமை நீரேற்று நிலைய காவலர்கள் | 5 | 2 |
| லாரி ஓட்டுனர்கள் | 2 | – |
| லாரி கிளீனர்கள் | 2 | 1 |
| ஜீப் ஓட்டுனர்கள் | 1 | – |
| குழாய் திருப்புநர் | 14 | 4 |
| நீர் தேக்க தொட்டி காவலர் | 13 | 6 |
| குடிநீர் கணக்காளர் (மீட்டர் ரீடர்) | 3 | – |
| சணப்பிரட்டி மேல்நிலைத்தொட்டி இயக்குபவர்கள் | 18 (தொகுப்பூதியம்) | – |

இந்நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வாங்கல் மற்றும் நெரூர் மற்றும் கட்டளை ஆகிய இடங்களில் காவேரி ஆற்றில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து 147.00 இலட்சம் லிட்டர்கள் வழங்கப்பட்டு வருகிறது. நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டர்கள் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குழாய் பராமரிப்பு பணிகள் ஒப்பந்தப்புள்ளி பெற்று செய்யப்படுகிறது.

ரூ.110.38 இலட்சம் மதிப்பீட்டில் நெரூர் காவேரி ஆற்றில் புதிய திட்டத்தின் மூலம் கூடுதலாக தண்ணீர் எடுக்க UIDSSMT தின் கீழ் இத்திட்டம் செயல்படுத்திட சட்டபூர்வமாக அனுமதி பெறப்பட்டு பணிகள் முடிவு பெற்று பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கரூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.68.40 கோடி மதிப்பீட்டில் நெரூரில் காவேரி ஆற்றில் ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனமான KFW நிதியுதவியுடன் நீடித்த கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது.

கரூர் நகருக்கு தேவையான குடிநீர் காவிரி ஆற்றிலிருந்து எடுக்கப்பட்டு பிரதான குழாய்கள் மூலம் 48 நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் நகரில் உள்ள எல்லா இடங்களுக்கும் சீராக வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் நகரில் குடிநீர் விநியோகம் திருப்திகரமாக உள்ளது. மேற்படி திட்டம் ரூ.630.30 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் வாரியத்தினால் அரசு மற்றும் எல்.ஐ.சி.கடன் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகத்திற்காக 1) செங்குந்தபுரம், 2) வ.உ.சி.தெரு, 3) ஜெயபிரகாஷ் நடுநிலைப்பள்ளி, 4) பசுபதிபாளையம், 5) திருமாநிலையூர், 6) மடவிளாகம், 7) ஜவஹர் பஜார், 8) சிதம்பரம் மாணவர் விடுதி வளாகம் – 2 மேல்நிலைத் தொட்டிகள், 10) அண்ணா நகர், 11) இராமானூர் மேல்நிலைத்தொட்டிகள் உள்ளன. ஏற்கனவே உள்ள ஜவஹர் பஜார் தண்ணீர் தொட்டியுடன் இவற்றின் கொள்ளளவு 77 லட்சம் லிட்டர்களாகும்.

**கரூர் நகராட்சி பகுதிகளிலுள்ள பொது மக்களுக்கு கீழ்க்கண்ட உயர்நிலை மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் மூலமாக சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.**

| | | |
|---|---|---|
| 1 | ஜவஹர் பஜார் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி | 6.00 லட்சம் லிட்டர் |
| 2 | ஜவஹர் பஜார் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 9.00 லட்சம் லிட்டர் |
| 3 | செங்குந்தபுரம் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 4.00 லட்சம் லிட்டர் |
| 4 | ஜெயப்பிரகாஷ் நடுநிலைப் பள்ளி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 4.00 லட்சம் லிட்டர் |
| 5 | வ.உ.சி.தெரு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 6.00 லட்சம் லிட்டர் |
| 6 | இராமானூர் மேல்நிலைத்தொட்டி | 5.00 லட்சம் லிட்டர் |
| 7 | திருமாநிலையூர் மேல்நிலைத்தொட்டி | 2.00 லட்சம் லிட்டர் |
| 8 | சிதம்பரம் மாணவர் விடுதி வளாகம் மேல்நிலைத்தொட்டி | 12.00 லட்சம் லிட்டர் |
| 9 | சிதம்பரம் மாணவர் விடுதி வளாகம் மேல்நிலைத்தொட்டி | 12.00 லட்சம் லிட்டர் |
| 10 | அண்ணா நகர் மேல்நிலைத்தொட்டிகள் | 12.00 லட்சம் லிட்டர் |
| 11 | பசுபதிபாளையம் மேல்நிலைத்தொட்டி | 5.00 லட்சம் லிட்டர் |

**இனாம் கரூர் பகுதிகளிலுள்ள பொது மக்களுக்கு கீழ்க்கண்ட உயர்நிலை மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.**

| | | |
|---|---|---|
| 1 | வாங்கப்பாளையம் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 14.00 லட்சம் லிட்டர் |
| 2 | வெங்கமேடு மேல்நிலை நீர் தேக்கத்தொட்டி | 4.00 லட்சம் லிட்டர் |
| 3 | பெரிய கோதூர் மேல்நிலை நீர் தேக்கத்தொட்டி | 2.60 லட்சம் லிட்டர் |

| | | |
|---|---|---|
| 4 | வடிவேல் நகர் மேல்நிலை நீர் தேக்கத்தொட்டி | 2.00 லட்சம் லிட்டர் |
| 5 | டான்சி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 6.00 லட்சம் லிட்டர் |

**தாந்தோன்றிமலை பகுதிகளிலுள்ள பொது மக்களுக்கு கீழ்க்கண்ட உயர்நிலை மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் மூலமாக சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.**

| | | |
|---|---|---|
| 1 | ஜீவா நகர் மேல்நிலை நீர் தேக்கத்தொட்டி | 3.00 லட்சம் லிட்டர் |
| 2 | தாந்தோன்றிமலை மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 2.00 லட்சம் லிட்டர் |
| 3 | தாந்தோன்றிமலை மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 1.00 லட்சம் லிட்டர் |
| 4 | காளியப்பனூர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 1.50 லட்சம் லிட்டர் |
| 5 | செல்லாண்டிபாளையம் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 1.50 லட்சம் லிட்டர் |
| 6 | ராயனூர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 1.00 லட்சம் லிட்டர் |
| 7 | வெங்கக்கல்பட்டி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 0.60 லட்சம் லிட்டர் |
| 8 | கோடங்கிபட்டி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 0.60 லட்சம் லிட்டர் |
| 9 | மூலக்காட்டனூர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 0.60 லட்சம் லிட்டர் |
| 10 | சாலைப்புதூர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 0.30 லட்சம் லிட்டர் |
| 11 | தோரணக்கல்பட்டி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 0.30 லட்சம் லிட்டர் |
| 12 | காந்திகிராமம் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 2.50 லட்சம் லிட்டர் |

**சணப்பிரட்டி பகுதிகளிலுள்ள பொது மக்களுக்கு கீழ்க்கண்ட உயர்நிலை மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலமாக சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.**

| | | |
|---|---|---|
| 1 | சணப்பிரட்டி மெயின்ரோடு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 0.60 லட்சம் லிட்டர் |
| 2 | பாதையூர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 0.30 லட்சம் லிட்டர் |
| 3 | பாரதியார் நகர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 0.30 லட்சம் லிட்டர் |
| 4 | நரிகட்டியூர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 1.00 லட்சம் லிட்டர் |
| 5 | வெள்ளாளப்பட்டி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 1.00 லட்சம் லிட்டர் |
| 6 | மூலக்காட்டனூர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 0.60 லட்சம் லிட்டர் |
| 7 | முல்லை நகர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 1.00 லட்சம் லிட்டர் |
| 8 | ராஜா நகர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 1.00 லட்சம் லிட்டர் |
| 9 | பெரியார் நகர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 1.00 லட்சம் லிட்டர் |
| 10 | எஸ்.வெள்ளாளப்பட்டி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 0.30 லட்சம் லிட்டர் |
| 11 | செல்வநகர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 0.30 லட்சம் லிட்டர் |
| 12 | ஏவிபி நகர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 0.30 லட்சம் லிட்டர் |

கரூர் நகர்மன்றத்தின் 30.08.2013 ம் தேதிய 1622ம் தீர்மானத்தின்படி கீழ்க்கண்ட விபரப்படி குடிநீர் இணைப்புக்கு வைப்புத்தொகை கட்டணம், மற்றும் குடிநீர் வரி விதிக்கப்படுகிறது. 25.10.2011 முதல் இணைக்கப்பட்ட நகராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளுக்கும் கீழ்க்கண்ட கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

| | குடிநீர் இணைப்பு வைப்புத்தொகை | மாதாந்திர குடிநீர் கட்டணம் | | | |
|---|---|---|---|---|---|
| | | கரூர் பகுதி | இனாம் கரூர் பகுதி | தாந்தோணிமலை பகுதி | சணப்பிரட்டி பகுதி |
| வீடுகளுக்கு | ரூ.5000/– | 93 | 50 | 50 | 30 |
| வியாபாரம் | ரூ.10,000/– | 416 | 120 | 130 | 30 |
| தொழிற்சாலைகள் | ரூ.25,000/– | 416 | 400 | – | 30 |

வ.உ.சி.தெருவில் உள்ள மேல்நிலைத் தொட்டி மற்றும் பசுபதிபாளையத்தில் உள்ள மேல்நிலைத்தொட்டி இவைகளுக்கும் காவிரியில் உள்ள தலைமை நீரேற்று நிலையம் மூலம் குடிநீர் நிரப்பப்பட்டு பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. திருமாநிலையூர் பகுதிக்கும் காவிரி நீர் வழங்கப்பட்டு வருகிறது.

நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டர் வழங்கப்பட்டு வருகிறது. இது வறட்சி காலங்களில் 80 லிட்டராக குறைத்து வழங்கப்பட்டு வருகிறது. நீர் இறைக்கும் கருவியும், தண்ணீர் தொட்டியும் பொது குடிநீர் குழாய்களும் அமைக்கப்பட்டு அருகாமையில் வசிக்கும் மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.

| | | 2017–2018 |
|---|---|---|
| 1 | பொதுக்குழாய் | 894 |
| 2 | சிறுநீர் கழிப்பிடங்கள் | 23 |
| 3 | குளிக்கும் அறைகள் | 33 |
| 4 | மொத்த குடிநீர் இணைப்புகள் | 43466 |
| 5 | மீட்டர் விநியோகம் | – |
| 6 | சிறு மின்விசை மோட்டார்கள் | 731 |
| 7 | கைப்பம்புகள் | 59 |
| 8 | நகரின் பாதுகாப்பு நீர் குழிகள் | – |
| 9 | மாட்டுத்தொட்டிகள் | – |
| 10 | குடிநீர், மின்இணைப்பு எண்ணிக்கை | 731 |
| 11 | கழிப்பிட மின் இணைப்பு எண்ணிக்கை | 41 |

**கீழ்க்கண்ட இடங்களில் இடுகாடும், சுடுகாடும் இருந்து வருகிறது.**

- வாங்கல் சாலையில் இந்துக்களுக்காக இடுகாடு
- வாங்கல் சாலையில் முஸ்லீம்களுக்காக இடுகாடு
- வாங்கல் சாலையில் கிருஸ்துவர்களுக்காக இடுகாடு
- வாங்கல் சாலையில் ஹரிஜனங்களுக்கான இடுகாடு
- வாங்கல் சாலையில் இந்துக்களுக்காக சுடுகாடு, வாங்கல் சாலையில் எரிவாயு சுடுகாடு
- பசுபதிபாளையத்தில் நவீன எரிவாயு சுடுகாடு
- திருமாநிலையூர் இந்துக்களுக்காக இடுகாடு

**இனாம் கரூர் பகுதியில்**

- கொங்கு நகர் சுடுகாடு
- என்.எஸ்.கே.நகர் சுடுகாடு
- பெரிய கோதூர் சுடுகாடு
- அரிகாரம்பாளையம் சுடுகாடு
- பெரிய குளத்துப்பாளையம் சுடுகாடு
- சின்ன குளத்துப்பாளையம் சுடுகாடு
- வாங்கப்பாளையம் சுடுகாடு

**தாந்தோணி பகுதியில்**

- திண்டுக்கல் மெயின் ரோடு சுடுகாடு மற்றும் இடுகாடு

**சணப்பிரட்டி பகுதியில்**

- மூலக்காட்டனூர் சுடுகாடு
- எஸ்.வெள்ளாளப்பட்டி சுடுகாடு
- நரிக்கட்டியூர் சுடுகாடு
- எஸ்.வெள்ளாளப்பட்டி ஆதிதிராவிடர் காலனி சுடுகாடு
- சணப்பிரட்டி சுடுகாடு
- செல்வநகர் சுடுகாடு

## பொது

## பேருந்து நிலையம், ஆடுவதை சாலை, சந்தை

சென்ற ஆண்டுகளில் சந்தைகள், பேருந்து நிலையம், ஆடுவதை சாலை ஆகியவற்றில் இருந்து கிடைத்த வருமானம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | ஆண்டு | சந்தை | பேருந்து நிலையம் | ஆடுவதை சாலை | சாலை மரங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2015–2016 | 4497154 | 7155402 | 141500 | –– |
| 2 | 2016–2017 | 4722011 | 7513170 | 148575 | –– |
| 3 | 2017–2018 | 4958113 | 7888833 | 156004 | –– |

- கரூர் நகரில் ஒரு தினசரி சந்தையும், ஒரு வார சந்தையும் இனாம் கரூரில் வார சந்தை ஒன்றும், கரூர் மற்றும் இனாம் கரூர் பகுதி என 2 உழவர் சந்தைகள் உள்ளது.
- தனியார் சந்தை இந்நகரில் இல்லை.

## பேருந்து நிலையம்

கோவை சாலையும் வடக்கு பிரதட்சணம் சாலையும் கூடுமிடத்தில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.37.25 லட்சம் செலவில் கட்டப்பட்டு எல்லா வசதிகளுடன் கூடிய "A" வகுப்பு பேருந்து நிலையம் அறிக்கையாண்டில் செம்மையாக பராமரிக்கப்பட்டு வந்தது. பேருந்து நிலையத்தில் 95 கடைகள் உள்ளன. இவற்றின் மூலம் ஆண்டுக்கு 42 லட்சம் வருமானம் ஈட்டப்படுகிறது.

## மரம் நடுதல்

ஆசாத் பூங்காவினை நகராட்சி பராமரித்து வருகிறது. ஜவஹர் பூங்கா தற்போது நீர்தேக்கத் தொட்டி வளாகமாக உள்ளது. நகராட்சியில் மொத்தம் உள்ள 85.82 கி.மீ. நீளம் உள்ள சாலையின் இரு ஓரங்களிலும் 2500 மரங்கள் இருந்தன. நகராட்சி இடங்களில் 801 மரங்கள் இருந்தன.

### நகரமைப்பு பிரிவு

### அலுவலர் மற்றும் பணியாளர் விபரம்

| | | |
|---|---|---|
| முதுநிலை நகரமைப்பு அலுவலர் | : | 1 |
| நகரமைப்பு ஆய்வாளர்கள் | : | 3 |
| நகரசார் ஆய்வாளர் (மாற்றுப்பணி) | : | 1 |

## நகர எல்லை விரிவாக்கம்

கரூர் நகர எல்லை விரிவாக்கம் செய்வது தொடர்பாக (ந.க.எண்.3123/2010/01) நகர்மன்ற தீர்மானம் எண்.329, நாள்.13.09.2010ல் கோரியதன் அடிப்படையில் சணப்பிரட்டி ஊராட்சி, இனாம் கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி ஆகியவற்றை கரூர் நகரத்துடன் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்திட அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. அரசாணை எண்.279, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.09.11.2010ல் கரூர் நகராட்சியுடன் இனாம் கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சிகளையும் சணப்பிரட்டி ஊராட்சியையும் இணைத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அரசு பதிவிதழ் நாள்.09.11.2011, பாகம் – 2, பிரிவு 2ல் ஆட்சேபணை ஆலோசனை கோரி பிரசுரம் செய்யப்பட்டு ஆட்சேபணை இல்லாத காரணத்தினால் அரசாணை எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.14.01.2011ல் எல்லை விரிவாக்கம் செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 48 வார்டுகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தற்போது நகராட்சியின் எல்லை விரிவு செய்யப்பட்டுள்ளது. அதன் தற்போதைய பரப்பளவு **53.26** சதுர கி.மீ.ஆக உள்ளது.

கரூர் நகராட்சி **3** பிரிவுகளாக பிரிக்கப்பட்டு **3** நகரமைப்பு ஆய்வாளர்களால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கரூர் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு இணைக்கப்பட்ட பகுதிகள் நீண்ட காலமாக பேரூராட்சிகளாக இருந்தும், சில காலம் நகராட்சியாக இருந்தும் வந்துள்ளன. ஆனால் இப்பகுதிகளில் முறையான அனுமதியின்றி மனைப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, நகராட்சியால் சாலைகள் ஏற்கப்பட்டு, சாலை வசதிகள் மெட்டல் அமைத்தும், வடிகால் வசதி, தெரு விளக்கு வசதி, பாதாள சாக்கடை வசதி போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டும் உள்ளன. இவை தவிர்த்து முழுமைத் திட்டதில் நில உபயோகத்திற்கு மாறான வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன.

நகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதால், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்ள சம்பந்தப்பட்ட மனை உரிமையாளர்களிடம் கட்டணம் வசூலிக்கும் வகையில் நகர்மன்ற தீர்மானம் எண்.**173**, நாள்.**13.01.2012**ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, வசூலிக்கப்பட்டு வருகிறது.

அனுமதியற்ற மனைப்பிரிவுகளை முறைப்படுத்திக் கொள்ள அரசை கேட்டுக் கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.**254**(அ), நாள்.**02.03.2012**ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. (கோப்பு எண்.**744/06**) அரசு உத்தரவு எதிர்பார்க்கப்படுகிறது.

## <u>நகரமைப்பு பிரிவு கட்டணங்கள் வசூலித்தல்</u>

கட்டிட உரிம கட்டணங்களை உயர்வு செய்திட நகர்மன்ற தீர்மானம் எண்.**68**, நாள்.**29.12.2011**ன்படி தீர்மானிக்கப்பட்டு, கரூர் மாவட்ட அரசிதழ் நாள்.**28.02.2012**ல் பிரசுரம் செய்யப்பட்டு, கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் கட்டணங்கள் கணிசமாக உயர்த்தி வசூலிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | நகரமைப்பு பிரிவு கட்டண வசூல் விபரம் | 2015-2016 | 2016-2017 | 2017-2018 |
|---|---|---|---|---|
| 1 | கட்டிட உரிமக்கட்டணம் | 1501230 | 1623250 | 983480 |
| 2 | அபிவிருத்தி கட்டணம் | 136215 | 156680 | 121192 |
| 3 | அடிப்படை வசதிக்கட்டணம் | 3427475 | 2162345 | 2548225 |
| 4 | இதரக்கட்டணங்கள் | 1814511 | 1682192 | 265290 |
| | **மொத்தம்** | **6879431** | **5624367** | **3918187** |
| இவைத்தவிர தொழிலாளர் நலநிதிக்கான தொகை ரூ.**2606780/–**ம் சம்பந்தப்பட்ட துறை கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டு வருகிறது. | | | | |

## அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டங்கள் / விரிவு அபிவிருத்தி திட்டம்

**1. மேற்கு பிரதட்சணம் சாலை விரிவு அபிவிருத்தி திட்டம்:**

இத்திட்டம் அரசு ஆணை எண்.1638, நாள்.13.07.1971ல் அங்கீகரிக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் 10.11.1971 தேதி பக்கம் எண்.18 முதல் 40 வரை, பாகம் 2ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. டி 10 – டி 10, டி19 – டி19 ஆகிய திட்ட சாலைகள் நில ஆர்ஜிதம் செய்து அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்ட பகுதியில் புதிய பேருந்து நிலைய கட்டுமானம் ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்டத்தின் (ஐ.யு.டி.பி) கீழ் கட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் எல்லா இடங்களும் அபிவிருத்தி அடைந்து உள்ளதால், நகரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.33565/88/டி4, நாள்.11.11.1988ல் கட்டிட விதிகளை பின்பற்றினால் போதுமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நிலவியலின் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் அடிப்படையில் இத்திட்டத்தை மறு ஆய்வு செய்து அரசின் அனுமதி பெற நடவடிக்கையிலிருந்து வருகிறது.

**2. லட்சுமி நாராயண சமுத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம்:**

இத்திட்டம் அரசு ஆணை எண்.1636, நாள்.14.08,1973ல் அனுமதிக்கப்பட்டு தமிழக அரசிதழில் 14.11.1973 தேதியில் பக்கம் 2 முதல் 14 பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. திட்ட சாலை CC40 அடி சாலை தார் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இருந்த பூங்கா ஒதுக்கீடு நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை, தமது ந.க.எண்.8346/04/DP3 நாள்.2/12/2004 உள்ள செயல்முறை உத்திரவு மூலம் இத்திட்டத்தில் உள்ள 80' O" BB' திட்ட சாலையை 45' O" அகல சாலையாக மாற்றி உத்திரவிட்டுள்ளார். தற்போது நிலவியலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் அடிப்படையில் இத்திட்டத்தை மறு ஆய்வு செய்ய நடவடிக்கை இருந்து வருகிறது.

**3. புகளூர் ரோடு கிழக்கு விரிவு அபிவிருத்தி திட்டம்:**

இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12283/91/DP2, நாள்.07.121993 உள்ள செயல்முறை உத்திரவு மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது நிலவியலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் அடிப்படையில் இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**4. சாமிநாதபுரம் விரிவு அபிவிருத்தி திட்டம்:**

இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ந.க.எண்.11000/07/டி3, நாள்.20.02.1979ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் ந.க.எண்.26705/02DP3, நாள்.18.08.2007 உள்ள செயல்முறை உத்திரவு மூலம், வரைவு திட்டத்திற்கு இசைவு அளிக்கப்பட்டுள்ளது. தற்போது வரப்பெற்றுள்ள திட்ட வரைபடம் மற்றும் விதிகள் நடைமுறைக்கு ஏற்ப இல்லை என்பதால், விதிகளை எளிதாக்கிடவும், நிலவியலில் உள்ளவாறு திட்ட வரைபடம் தயார் செய்ய கோரி

உ.தி.கு.தீர்மானம் 30.01.2011ல் நிறைவேற்றப்பட்டு, ந.ஊ.ஆ. அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

**5. புகளூர் ரோடு மேற்கு விரிவு அபிவிருத்தி திட்டம்:**

இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ந.க.எண்.11826/77/T2, நாள்.04.03.1980 தேதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களால் ந.க.எண்.9400/05/DP3, நாள்.29.11.2005 உள்ள செயல்முறை உத்திரவு மூலம் வரைவு திட்டத்துக்கு அனுமதிக்க பட்டுள்ளது. திட்ட விதி 21ன் கீழ் படிவம் 14ஐ பிரசுரம் செய்யும் நடவடிக்கை இருந்து வருகிறது.

**6. டிரங்க் ரோடு பை–பாஸ் விரிவு அபிவிருத்தித் திட்டம்:**

இத்திட்டம் அரசு ஆணை எண்.699, நாள்.26.06.1973 தேதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. திட்டசாலை 'AA''க்கு நிலம் தானமாக பெறப்பட்டு 40 அடியாக அகலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் திட்ட சாலை டி2–டி2க்கு தேவையான இடம் நிலச் சொந்தக்காரர்களால் விடப்பட்டு சாலை அமைக்கப்பட்டுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் அடிப்படையில் இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**7. கௌரிபுரம் விரிவு அபிவிருத்தி திட்டம்:**

இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ந.க.எண்.5343/80/டி1, நாள்.11.10.1981ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் அடிப்படையில் இத்திட்டத்தை மறு ஆய்வு செய்து நகர் ஊரமைப்பு துறையின் அனுமதி பெற நடவடிக்கை இருந்து வருகிறது.

**8. பசுபதிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம்:**

இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ந.க.எண்.15.12.1969ல் நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 14 (3)ன்படி தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசிதழில் 12.01.1979 தேதியில் பக்கம் 24 முதல் 43 வரை பாகம் 2–ல் நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 69 (2) (எ)ன்படி பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. தற்போது நிலவியலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் அடிப்படையில் திட்டத்தை மறு ஆய்வு செய்து அரசின் அனுமதி பெற நடவடிக்கை இருந்து வருகிறது.

**9. பசுபதிபாளையம் கிழக்கு அபிவிருத்தி திட்டம்:**

இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ந.க.எண்.2044/80/டி1, நாள்.17.03.1981. இத்திட்ட கடிதத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது நிலவியலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் அடிப்படையில் இத்திட்டத்தை மறு ஆய்வு செய்ய நடவடிக்கை இருந்து வருகிறது.

**10. இனாம் கரூர் பகுதியில் 6 விரிவு அபிவிருத்தித் திட்டம்** நகர் ஊரமைப்பு துறை மூலம் தயார் செய்யப்பட்டு இணக்கம் பெற அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**11. தாந்தோணி பகுதியில் 6 விரிவு அபிவிருத்தி திட்டங்கள்** நகர் ஊரமைப்பு துறை மூலம் தயார் செய்யப்பட்டு இணக்கம் பெற அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## முழுமைத்திட்டம்

கரூர் நகராட்சியில் முழுமைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு அரசு ஆணை எண்.734, H & UD, நாள்.23.04.1993ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது நிலவியலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் அடிப்படையில் மறு ஆய்வு செய்யப்பட்டு அரசின் அனுமதி பெற நடவடிக்கை இருந்து வருகிறது. இதற்கு கரூர் உள்ளூர் திட்ட குழுமம் தனது தீர்மானம் எண்.19, நாள்.15.07.2004ல் இசைவு அளித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்கள் கரூர் நகரினை சுற்றியுள்ள 2 நகராட்சிகளையும், பல ஊராட்சிகளையும் ஒருங்ிணைத்து கூட்டு உள்ளூர் திட்டக்குழுமமாக, அறிவிக்கை செய்ய அரசுக்கு பரிந்துரை செய்ததன்பேரில் அரசாணை எண்.135, நாள்.21.04.2005ல் இணக்கம் அளித்துள்ளது. அதனடிப்படையில் கூட்டு உள்ளூர் திட்ட குழுமப் பகுதிக்கான முழுமைத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டு, அரசாணை எண்.237, நாள்.01.11.2010ல் அரசால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. கூட்டு உள்ளூர் திட்ட குழும செயல் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

உள்ளூர் திட்டக்குழு தீர்மான எண்.05, நாள்.29.12.2011ல் கரூர் நகராட்சியின் 48 வார்டு மக்கள் பிரதிநிதிகளை கொண்ட உள்ளூர் திட்ட குழுமத்தில் கரூர் நகருடன் இணைக்கப்பட்ட பகுதிகளின் வேகமான வளர்ச்சியை கருத்திற்கொண்டும், தற்போதைய நில உபயோகப்படியும் விரிவு செய்யப்பட்ட கரூர் நகராட்சிக்கு புதிய முழுமைத் திட்டம் தயார் செய்ய அரசைக் கேட்டுக் கொள்ளவும், அதுவரை நடைமுறையில் உள்ள முழுமைத் திட்டத்தை பழைய கரூர் பகுதிக்கு மட்டும் பின்பற்றவும் கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

கூட்டு உள்ளூர் திட்டக்குழுமம் அமைக்கும் நேர்வில் நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையர், நகரமைப்பு அலுவலர் ஆகியோரை குழுவில் உறுப்பினர்களாக இடம் பெறும் வகையில் உத்திரவிட அரசைக் கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

எனவே, மேற்படி நிலையினை கருத்திற்கொண்டு 48 நகர்மன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய நகர்மன்ற / உள்ளூர் திட்ட குழும தீர்மானத்தின் அடிப்படையிலும், பழைய கரூர் நகருக்கான முழுமைத் திட்ட நில உபயோகங்களை தவிர்த்து இதர பகுதிகளுக்கு புதிய நில உபயோக வரைபடம் தயாரிக்கவும், அதுவரை மேற்படி முழுமைத் திட்ட நில உபயோகத்தை நிறுத்தி வைத்தும், பழைய கரூர் நகர் மட்டுமே உள்ளூர் திட்ட குழுவாக செயல்பட்டு வந்த

நிலையில், தற்போது புதியதாக அருகே உள்ள பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளதால் தனித்த (நகர்மன்றம்) உள்ளூர் திட்டக்குழு செயல்பாடு குறித்து தக்க வழிகாட்டுதல்கள் வழங்க அரசை கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டு, கோப்பு எண்.4721/2006/எப்1 கோப்பு வாயிலாக அரசின் உத்தரவிற்காக அனுப்பப்பட்டுள்ளது.

## புதிய பேருந்து நிலைய இடம் தேர்வு

கரூர் பேருந்து நிலையம் அமைக்க தானமாக இடம் வழங்க கோரி விளம்பரம் செய்ததில் திரு.நாச்சிமுத்து, திரு.என்.செந்தில்பிரசாத் மற்றும் அட்லஸ் எக்ஸ்போர்ட் எண்டர்பிரைசஸ் ஆகியோர் கருப்பம்பாளையம் ஊராட்சி திருமாநிலையூர் வருவாய் கிராமம் ராயனூர் பகுதியில் அமைந்துள்ள, புல எண்கள். 95/2, 97/2, 98/1, 113/1, 114/A2, 115/1B, 116/2, 117/1, 118, 119, 120, 121, 122, 123/1, 146/A, 147/A1, 148/1, 149, 150/1, 151/1, 152/1B, 243/2, 246/2, 247/2 மற்றும் 248/2 ஆகியவற்றில் உத்தேச அணுகு சாலை உள்பட மொத்தம் 12.14.ஏக்கர் பரப்பளவிலான இடத்தை தானமாக வழங்க முன்வந்துள்ள இடத்தை நகர அளவிலான உயர்மட்டத்திற்கு பரிசீலனை செய்தும், நகர் மன்றம் இடத்தில் பல்வேறு சிறப்பு அம்சங்களை பரிசீலனை செய்தும், இது வரை பேருந்து நிலையத்திற்கான தேர்வு செய்யப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றியதை ரத்து செய்து ஏகமனதாக தீர்மான எண்.1079, நாள்.28.12.2012 மற்றும் தீர்மான எண்.1445, நாள்.23.05.2013ல் நிறைவேற்றியதன் அடிப்படையிலும் கருப்பம்பாளையம் ஊராட்சி மன்றமும் 96/2012–2013, நாள்.28.01.2013 ஆம் நாளிட்ட தீர்மானத்தின் பேருந்து நிலையம் அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளதாலும், கரூர் மாவட்டம் கருப்பம்பாளையம் ஊராட்சி, திருமாநிலையூர் வருவாய் கிராமம் ராயனூர் பகுதியில் கரூர் நகராட்சிக்கென புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 152ன் படி அரசின் அனுமதியைக் கோர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தின் அடிப்படையில் கரூர் மாவட்டம் கருப்பம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட, புதிய பேருந்து நிலையம் அமையவுள்ள இடம் எவ்வித நில ஆர்ஜீத நடவடிக்கை மற்றும் நிலக்கிரையச் செலவினத் தொகை ஏதுமின்றி தானமாகக் கிடைப்பதால் நகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய நிலக்கிரையம் மற்றும் பத்திரச் செலவினங்கள் முதலானவை முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும், மேற்குறிப்பிட்ட இடத்தில், புதிய பேருந்து நிலையம் அமைக்க கருப்பம்பாளையம் ஊராட்சி மன்றமும், ஒப்புதல் வழங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 152ன்படி நகர்மன்றத்தால் நகராட்சிக்கு எல்லைக்கு வெளியில் பணிகள் ஏதும் செய்ய வேண்டிய நிலை இருப்பின், அரசின் அனுமதி பெறப்பட வேண்டும் என்பதால், புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கான அனுமதி வழங்குமாறு அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் செயற்குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின் கரூர் மாவட்டம், கருப்பம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட திருமாநிலையூர் வருவாய் கிராமம் ராயனூர் பகுதியில் அமைந்துள்ள, புல எண்கள். 95/2, 97/2, 98/1, 113/1, 114/A2, 115/1B, 116/2, 117/1, 118, 119, 120, 121, 122, 123/1, 146/A, 147/A1, 148/1, 149, 150/1, 151/1, 152/1B, 243/2, 246/2, 247/2 மற்றும் 248/2, புல எண்கள்.95 பகுதி, 97 பகுதி, 98 பகுதி, 113 பகுதி, 114 பகுதி, 115 பகுதி, 116 பகுதி, 117 பகுதி, 118, 119, 120, 121, 122, 123 பகுதி, 146 பகுதி, 147 பகுதி, 148 பகுதி, 149, 150 பகுதி, 151 பகுதி, 152 பகுதி, 243 பகுதி, 246 பகுதி, 247 பகுதி, 248 பகுதி ஆகியவற்றில் உத்தேச அணுகு சாலை உள்பட 12.14 ஏக்கர் பரப்பளவில் அடங்கியுள்ள இடத்தில், கரூர் நகராட்சிக்கென புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 152ன்படி அனுமதி வழங்கி அரசு ஆணை எண்.87 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.20.06.2013ல் அரசாணை வெளியிடப்பட்டது.

இது தொடர்பாக சென்னை உயர்நிதிமன்ற மதுரை கிளையில் கீழ்க்கண்ட

1) திரு.எஸ்.கோகுல்நாத் என்பவர் தொடர்ந்த வழக்கு WP No.188/2013,

2) திரு.இ.கோபிநாத் என்பவர் தொடர்ந்த வழக்கு WP.No.372/2013,

3) திரு.ஆர்.ஏகாம்பரம் என்பவர் தொடர்ந்த வழக்கு WP.No.1404/2013

4) திரு.எம்.சின்னத்தம்பி என்பவர் தொடர்ந்த வழக்கு WP.No.1648/2013

5) திரு.M.ராமலிங்கம் என்பவர் தொடர்ந்த வழக்கு WP.No.4310/2013

ஆகிய அனைத்து வழக்குகளும் 05.12.2013 அன்று மாண்புமிகு.நீதி அரசர்கள் R.சுதாகர் மற்றும் S.வைத்தியநாதன் அவர்களால் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

தற்போது இன்றைய தேதியில் கரூர் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக எந்த விதமான வழக்குகளும் நிலுவையில் இல்லை. பேருந்து நிலையம் அமைக்க வடிவமைப்பு வரைபடம் தயார் செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் வாயிலாக Consultant நியமனம் செய்து வடிவமைப்பு ஒப்புதல் நகர் ஊரமைப்பு துறையிலிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பேருந்து நிலையம் அமைக்க மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## SITE AND SERVICE SCHEME

### கொளந்தானூர் மற்றும் அருகம்பாளையத்தில் நகராட்சிக்கு சொந்தமான மனைகள் விற்பனை செய்தல்

கொளந்தானூர் மற்றும் அருகம்பாளையத்தில் நகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் மனைப் பிரிவு ஏற்படுத்தி மனையிடங்களை தவணை முறையில் விற்பனை செய்து கொள்ள வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையின் ஆணை எண்.477, தேதி.01.06.1990ல் உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் பேரில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் முன்னிலையிலும் மூன்று முறை குலுக்கல் நடத்தப்பட்டு மனையிடங்கள் பயனாளிகக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நகராட்சிக்கு சுமார் ரூ.60 இலட்சம் கிடைத்துள்ளது. மேலும் தவணை முறையில் மனையிடங்கள் பெற்ற பயனாளிகளில் சில நபர்கள் உரிய தவணைகளை உரிய காலத்தில் செலுத்தாக காரணத்தினால் அது போன்ற இனங்களை ரத்து செய்யவும், மறு குலுக்கல் நடத்தவும் எஞ்சியுள்ள நிலங்களை நகராட்சி வசம் தக்க வைக்கவும் உரிய அனுமதி கோரி அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

### ஆக்கிரமிப்பு

2017–2018 ஆண்டில் நகரில் உள்ள ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது நகராட்சி மூலம் அகற்றப்பட்டு வருகிறது. அதில் இரட்டை வாய்க்கால் ஆக்கிரமிப்புகளும் அடங்கும். மேலும் புதியதாக ஏற்படும் ஆக்கிரமிப்புகளை அவ்வப்போது கண்டறியப்பட்டு அகற்றப்பட்டு வருகிறது.

### கட்டிட அனுமதி

இவ்வறிக்கை ஆண்டில் 281 கட்டிட மனுக்கள் அனுமதி கோரி வரப்பெற்றதில், 146 கட்டிட மனுக்கள் அனுமதிக்கப்பட்டது. 82 மனுக்கள் குறைபாடுகள் இருந்ததால் திருப்பப்பட்டது.

## தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

## NATIONAL URBAN LIVELIHOODS MISSION (NULM)

இத்திட்டத்தினை மத்திய மாநில அரசு நிதி உதவியுடன் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 2017–2018 ஆம் ஆண்டிற்கு வரப்பெற்ற தொகை ரூ.1.76இலட்சங்கள் ஆகும். இத்தொகையை மத்திய மாநில அரசின் வழிகாட்டுதலின்படி கீழ்காணும் தலைப்பின் கீழ் செலவு செய்யப்பட உள்ளது.

| வ.எண். | தலைப்பு | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகர்ப்புற சாலையோர வியாபாரிகள்<br>(Suppont to Urban Street Vendory (SUSV)) | 1.76 |
| 2 | நகர்ப்புற வீடற்ற ஏழைகள்<br>(Scheme at Shelter for Urban Homeless (SUH)) | |
| | மொத்தம் | |

## கரூர் நகராட்சி – குடிசைப் பகுதிகள்

**கரூர் பகுதியில் கீழ்காணும் குடிசைப்பகுதிகள் இருந்து வருகிறது.**

1. நீலிமேடு
2. பாலம்மாள்புரம்
3. முனியப்பன் கோவில் தெரு
4. பசுபதி லே அவுட்
5. முத்துராஜபுரம்
6. பிரம்மதீர்த்தம் ரோடு
7. வ.உ.சி.தெரு
8. வஞ்சியம்மன் கோவில் தெரு
9. ஈ.வெ.ரா.சாலை
10. படிக்கட்டுத்துறை
11. திருமாநிலையூர்
12. கொளந்தானூர்
13. பசுபதிபாளையம்

**தாந்தோணி பகுதியில் கீழ்காணும் குடிசைப்பகுதிகள் அங்கீகரிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளாக இருந்து வருகிறது.**

1. சத்தியமூர்த்தி நகர்
2. குறிஞ்சி நகர்
3. வெங்கக்கல்பட்டி
4. கோடங்கிப்பட்டி
5. காட்டுப்பாளையம்
6. அம்மன் நகர்
7. முத்தலாடம்பட்டி (அம்பேத்கார் நகர்)
8. பழைய சுக்காலியூர்
9. காளியப்பனூர்
10. தோரணக்கல்பட்டி (ஜல்லிவட நாயக்கனூர்)

**தாந்தோணி பகுதியில் கீழ்காணும் குடிசைப்பகுதிகள் அங்கீகரிக்கப்படாத குடிசைப் பகுதிகளாக இருந்து வருகிறது.**

1. கணபதிபாளையம் வடக்கு
2. குண்டுமாச்சாம்பட்டி
3. ராயனூர் காலனி
4. அம்பேத்கார் காலனி

**இனாம் கரூர் பகுதியில் கீழ்க்காணும் குடிசைப்பகுதிகள் அங்கீகரிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளாக இருந்து வருகிறது.**

1. வாங்கப்பாளையம்
2. இந்திரா நகர்
3. என்.எஸ்.கே.நகர்
4. பெரிய குளத்துப்பாளையம்
5. சின்ன குளத்துப்பாளையம்
6. அரிக்காரம்பாளையம்
7. பெரிய கோதூர்
8. திருக்காம்புலியூர்
9. அண்ணா காலனி

**சணப்பிரட்டி பகுதியில் கீழ்க்காணும் குடிசைப்பகுதிகள் அங்கீகரிக்கப்படாத குடிசைப் பகுதிகளாக இருந்து வருகிறது.**

1. சணப்பிரட்டி குடித்தெரு
2. ஆதிதிராவிடர் காலனி

**<u>2017 – 2018ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப்பணிகள்</u>**

| வ.எண். | திட்ட விபரம் | பணிகளின் எண்ணிக்கை | தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை நிதி | 43 | 350.00 |
| 2 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (MLA Fund) | 10 | 114.75 |
| 3 | தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIF) | 3 | 500.00 |
| 4 | உட்கட்டமைப்பு மற்றும் 2016–17 குகை வழிப்பாதை அடிப்படை திட்ட நிதி (குகை வழிப்பாதை அமைத்தல்) | 2 | 1320.00 |
| 5 | பொது நிதிப்பணிகள் | 56 | 382.00 |
| 6 | கல்வி நிதி | 25 | 358.00 |
| 7 | குடிநீர் நிதி | 24 | 132.00 |
| 8 | உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி மற்றும் மூலதனநிதி | 1 | 400.00 |
| 9 | தன்னிறைவு திட்டம் | 2 | 16.10 |
| 10 | சாலை பாதுகாப்பு நிதி | 1 | 10.20 |
| | **மொத்தப்பணிகள்** | **167** | **3583.05** |

# வருவாய் பிரிவு

ஒருங்கிணைக்கப்பட்ட கரூர் நகராட்சிக்கு கீழ்க்கண்ட பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு 48 வார்டுகளாக இரண்டு வருவாய் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு வசூல் பணிகள், குத்தகை வசூல் பணிகள் மற்றும் குடிநீர் வசூல் பணிகள் தொடர்ந்து பணியாற்றினார்கள்.

| பெயர் | பணியிடம் | காலிபணியிடம் |
|---|---|---|
| வருவாய் அலுவலர் | 1 | – |
| வருவாய் ஆய்வாளர்கள் | 2 | – |
| வருவாய் உதவியாளர்கள் | 18 | 6 |
| அலுவலக உதவியாளர்கள் | 3 | 1 |

2017–2018ம் ஆண்டில் மொத்த சொத்துவரி விதிப்பு எண்ணிக்கை 69498 ஆகும். அறிக்கை ஆண்டில் 1230 வரிவிதிப்புகள் புதியதாக விதிக்கப்பட்டு ரூ.140.93 இலட்சம் கூடுதலாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் மொத்த வரிவிதிப்பு எண்ணிக்கை 69498அனைத்து வருவாய் இனங்களின் மொத்த கேட்பு ரூ.3799.32 இலட்சம் ஆகும்.

**வரி விதிப்பு அடிப்படை மண்டல வாரியாக விபரம் (அடிப்படை வரி சதுரடி வாரியாக)**

| | | "A" மண்டலம் | "B" மண்டலம் | "C" மண்டலம் |
|---|---|---|---|---|
| 1. | இனாம் கரூர் நகராட்சி பகுதியில் | ரூ.1.60 | ரூ.1.25 | ரூ.0.75 |
| 2 | கரூர் நகராட்சி பகுதியில் | ரூ.1.60 | ரூ.1.25 | ரூ.0.75 |
| | | **குடியிருப்புக்கு** | **சிறிய தொழிற்கூடம் மற்றும் வணிகம்** | **தொழிற்கூடம் மற்றும் வணிகம்** |
| 3 | சணப்பிரட்டி ஊராட்சி பகுதியில் | ரூ.1.60 | ரூ.1.25 | ரூ.0.75 |
| 4 | தாந்தோணி நகராட்சி பகுதியில் | ரூ.1.60 | ரூ.1.25 | ரூ.0.75 |

| | விபரம் | கட்டிடங்கள் வருடாந்திர வாடகை மதிப்பு | விவசாய நிலங்களில் கிஸ்து பேரில் | காலியாக உள்ள மனைகள் விலை மதிப்பு 1/2 ஆண்டுக்கு |
|---|---|---|---|---|
| 1. | பொதுக்காரியங்களுக்கு | 54% | இல்லை | 1/4 % |
| 2 | தண்ணீர் வரி | 24% | இல்லை | 1/4 % |
| 3 | விளக்கு வரி | 18% | இல்லை | 1/16% |
| 4 | கல்வி வரி | 6% | இல்லை | 3/4 % |

## வருவாய் மற்றும் மூலதன நிதி வரவு அறிக்கை – 2017 – 2018

(ரூ.ஆயிரங்களில்)

| | | |
|---|---|---|
| 1 | வரவு | 38,67,27,000 |

## வருவாய் மற்றும் மூலதன நிதி செலவு அறிக்கை – 2017 – 2018

(ரூ.ஆயிரங்களில்)

| | | |
|---|---|---|
| 1 | செலவு | 32,76,56,000 |

### வரி மற்றும் வரியில்லா இனங்கள் கேட்பு, வசூல் நிலுவை விபரம்

| வ.எண். | கூகை | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 1 | வரியினங்கள் | 3181.74 | 1510.98 | 1670.75 |
| 2 | வரியில்லா இனங்கள் | 617.58 | 210.76 | 406.82 |

அறிக்கையாண்டில் சொத்துவரி நடப்புக் கேட்பில் வரி வசூல் சதவீதம் 76% வரியில்லா இனங்களின் கீழ் அறிக்கையாண்டில் நடப்பில் வசூல் சதவீதம் 82% வசூலிக்கப்பட்டுள்ளது.

## கடன்

அறிக்யைாண்டில் TNUDF & TUFIDCO நிறுவனத்திடமிருந்து ரூ.1968.43 லட்சம் கடனாக பெறப்பட்டு அறிக்கையாண்டில் ரூ.221.66 லட்சம் கடன் தவணையாக TNUDF & TUFIDCO நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. கடன் நிலுவை ரூ.1470.06 லட்சம் ஆகும்.

## வழக்குகள்

| வ.எண். | கூகை | உச்ச நீதிமன்றம் | உயர் நீதிமன்றம் | கரூர் நீதிமன்றம் | மொத்த வழக்குகள் |
|---|---|---|---|---|---|
| 1 | பொதுப்பிரிவு | – | 3 | – | 3 |
| 2 | வருவாய் பிரிவு | – | 102 | 27 | 129 |
| 3 | பொறியியல் பிரிவு | – | 10 | 6 | 16 |
| 4 | பொது சுகாதாரப்பிரிவு | – | 7 | 4 | 11 |
| 5 | நகரமைப்பு பிரிவு | – | 9 | 27 | 36 |

## தணிக்கை

2016–2017 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை பெறப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை பெறப்படவில்லை. இதுவரை 1174 எண்ணிக்கைகள் தணிக்கை தடைகள் உள்ளது. நடப்பு ஆண்டில் 775 எண்ணிக்கைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. நிலுவை 399 எண்ணிக்கைகள் உள்ளது.

# <u>பொதுக்குறிப்புகள்</u>

ஆணையர் மற்றும் அவரோடு இருந்து பணியாற்றும் அலுவலர்கள், மேலாளர், மற்றும் துறைப் பணியாளர்களிடையே நல்ல ஒற்றுமையாக பணியாற்றி வந்தார்கள். மேலும் அவர்கள் அனைவரும் நிர்வாகம் சிறப்பான முறையில் செயல்பட நகராட்சி அலுவலர்களுடன் முழு ஒத்துழைப்பு நல்கியமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ப.அசோக்குமார்
ஆணையர்
கரூர் நகராட்சி

இடம்: கரூர்

நாள்:

மக்கள் சேவையே இறைவன் சேவை